டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.06.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 011 - Madurai | Online Edition

# கிசான் சாரதி தளம்

# தொழில்நுட்பம் மூலம் விவசாயிகளுக்கு அதிகாரமளித்தல்

புது தில்லி, ஜுன் 29

மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், மத்திய வேளாண்மை, விவசாயிகள் நல அமைச்சகத்தின் கூட்டு முயற்சியால் 2021 ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட 'கிசான் சாரதி' தளம், நாட்டின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த விவசாய ஆலோசனை வழங்கும் டிஜிட்டல் தளமாகத் திகழ்கிறது. விவசாயிகளுக்குத் தகுந்த நேரத்தில், நம்பகமான, பன்மொழி ஆலோசனைகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். மத்திய வேளாண் புள்ளியியல் ஆராய்ச்சி நிறுவனம், டிஜிட்டல் இந்தியா கார்ப்பரேசன் ஆகியவை இணைந்து இத்தளத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றன.

விவசாயிகள், வேளாண் வல்லுநர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்காக இந்தத் தளம் 'ஊடாடும் தகவல் பரவல் அமைப்பு' என்னும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. இதன் மூலம் ஆய்வகங்களில் கண்டறியப்படும் நவீன வேளாண் நுட்பங்கள் நேரடியாக விவசாயிகளிடம் கொண்டு செல்லப்படுகின்றன. இந்தத் தளம் நாட்டின் 730-க்கும் மேற்பட்ட வேளாண் அறிவியல் மையங்கள், 100-க்கும் மேற்பட்ட இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நிறுவனங்கள், 65-க்கும் அதிகமான வேளாண் பல்கலைக்கழகங்களை ஒன்றிணைத்து தேசிய அளவிலான வலுவான ஆலோசனை அமைப்பை உருவாக்கியுள்ளது.

### விவசாயிகளுக்கான சேவைகள்

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வானிலை அறிவிப்புகள், சந்தை நிலவரங்கள், அரசுத் திட்டங்கள் குறித்த

விவரங்களை இத்தளத்தின் மூலம் எளிதாகப் பெறலாம். குறிப்பாகப் பிரதமரின் கிசான் திட்டம் போன்ற மத்திய அரசுத் திட்டங்கள் குறித்தும் இதில் அறிந்துகொள்ள முடியும்.

ஜூன் 25, 2026 நிலவரப்படி, 102 மத்திய அரசுத் திட்டங்கள் உட்பட மொத்தம் 610 திட்டங்கள் குறித்து இந்த இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளன.

முக்கியத் தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தோட்டக்கலைப் பயிர்கள், கால்நடை வளர்ப்பு, மீன்வளம் போன்ற பல்வேறு துறைகளுக்கான ஆலோசனைகள் 13 பிராந்திய மொழிகளில் நேரடி உரையாடல் மூலம் வழங்கப்படுகின்றன.

விவசாயிகள் தங்களின் சந்தேகங்களை உள்ளூர் மொழிகளிலேயே கேட்டுத் தெளிவு பெறலாம். வாட்ஸ் அப், மொபைல் செயலி, வலைத்தளம், கிசான் அழைப்பு மையங்கள் போன்ற பல்வேறு வழிகளில் விவசாயிகள் இச்சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**பயனாளிகள் எண்ணிக்கை**

தற்போதைய நிலவரப்படி, நாட்டின் 37 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள 768 மாவட்டங்கள், 6.63 லட்சம் கிராமங்களில் இச்சேவை விரிவடைந்துள்ளது. இத்தளத்தில் 2.95 கோடி விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். அவர்களுள் 56.16 லட்சம் பேர் பெண் பயனாளிகள் ஆவர்.

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை நோக்கி நாடு முன்னேறும் வேளையில், டிஜிட்டல் விவசாயப் புரட்சியின் மூலம் விவசாயத் துறையைத் தற்சார்பு உடையதாக மாற்றுவதில் கிசான் சாரதி முக்கியப் பங்கு வகிக்கிறது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சிறுகமணியில் விசமில்லா விளைச்சலுக்கு வளமான இயற்கை விவசாயம் பயிற்சி பட்டறை

திருச்சி, ஜுன் 29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மண்வளம் பாதுகாப்போம் இயக்கம் (கேத் பச்சாவோ அபியான்) என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி திருச்சி மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் ஜுன் 1, 2026 முதல் ஜுன் 30, 2026 வரை நடத்தப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு 30.06.26 (செவ்வாய்க்கிழமை) அன்று விசமில்லா விளைச்சலுக்கு வளமான இயற்கை விவசாயம் குறித்த ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் இயற்கை வேளாண்மை, இயற்கை இடு பொருட்களை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல், சமச்சீர் உர பயன்பாடு, மண் வளம் பாதுகாப்பு, மண் பரிசோதனை, மண்ணின் வளத்திற்கு ஏற்ப உரமிடுதல் போன்ற தலைப்புகளின் கீழ் விரிவாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பங்கு பெற ஆர்வமுள்ள விவசாயிகள் 0431 2962854, 99424 49786, 97912 16356, 97156 26796 என்ற எண்களில் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு நிகழ்ச்சியில் கலந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மொபைல் ஆப் மூலம் உரங்கள்

## புதிய செயலி குறித்து ஸ்பிக் நிறுவனத்துடன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி



இராணிப்பேட்டை, ஜுன் 29

இராணிப்பேட்டை மாவட்டம், வேளாண்மை துறை ஆற்காடு ஒன்றியம் புதுப்பாடி ஜே பி திருமண மண்டபத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கு உரம் விநியோக புதிய செயலை குறித்து விழிப் புணர்வு நிகழ்ச்சி நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை கூடுதல் இயக்குனர் / இயக்குனர் சமிதி / ஸ்டாமின், புதுக்கோட்டை, சங்கரலிங்கம், சிறப்பு அழைப் பாளராக கலந்து கொண்டு பேசியதாவது, உரம் விநியோக புதிய நடைமுறையை அமல்படுத்துவதற்கு விவசாயி களின் தனித்துவ அடையாள எண் அவசியம் மாநில அளவில் இராணிப்பேட்டை மாவட்டம், வேளாண்மை துறையில் முன்னோடி மாவட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு தேவையான அளவு உரங்களை வாங்கி பயன்படுத்த வேண்டும் என்று பேசினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம், தலைமை வகித்து உரம் விநியோகம் புதிய நடைமுறை பற்றி விவசாயி களுக்கு குறித்த நேரத்தில் தேவையான அளவு உரங்களை வழங்கிட அறிவுரையை எடுத்து கூறினார். நிகழ்ச்சி ஆற்காடு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சூரிய நாராயணன் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மொபைல் செயலின் மூலம் அருகில் உள்ள விற்பனை மையங்களில் உரங்கள் இருப்பு நிலை தேவையான உரங்கள் கிடைக்கும் விவரங்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் சேவை எளிதாக பெறும் வழிமுறைகள் குறித்து

விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் ஸ்பிக் நிறுவனத்தில் மண்டல மேலாளர் பாலமுருகன், கலந்து கொண்டார். இதில் மாவட்ட தரக்கட்டுப்பாட்டு வேளாண்மை அலுவலர் பிரேம்குமாரி, வேளாண்மை அலுவலர் பாலாஜி, துணை வேளாண்மை அலுவலர் கண்ணன், ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் ராஜேஷ் மற்றும் சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# இயந்திர நடவு மானியம் பதிவு செய்ய அழைப்பு!

புதுக்கோட்டை, ஜூன் 29

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரத்தில் குறுவை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இயந்திர நடவு மானியம் பெற விண்ணப்பம் பதிவு செய்து பயன்பெற அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மு.மதியழகன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, நெல் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் இயந்திர நடவு செய்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000 மானியம் தொகை வழங்கப்பட உள்ளது.

அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 2 ஏக்கர் வரை இயந்திர நடவிற்கான மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் விதை நெல், நுண்ணூட்டக் கலவை மற்றும் உயிர் உரங்கள் மானிய விலையில் விவசாயி களுக்கு வழங்கப்பட உள்ளது. தற்போது நெல் இயந்திர நடவு அல்லது நேரடி விதைப்பு செய்துள்ள விவசாயிகள் நெல் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் பயன் பெறுமாறு இதன் மூலம் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் ஐபிஎல் அக்ராணி சார்பாக விவசாயிகளுக்கான சந்திப்புக் கூட்டம்



கடலூர், ஜூன் 29

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம், சார்பாக 25.06.26 அன்று கம்மாபுரம் வட்டாரம், கோபாலாபுரம் கிராமத்தில் ஐபிஎல் அக்ராணி பயிற்சித் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கான சந்திப்பும் கூட்டம் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். இப்பயிற்சியில் முனைவர் கூ.சு.ஜெய்வேலு, உரச்சமச்சீர் பற்றியும், உழவன் செயலி மூலம் வேளாண்மை பற்றிய தகவல்களையும் மற்றும் இயற்கை உரம், பசுந்தாள் உரம், தொழுஉரம் பற்றியும் மற்றும் மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

மேலும் இலா. விஜய் (காளாண் தொழில் முனைவோர்), காளான் வளர்க்கும் முறை மற்றும் தாய்வித்து தயாரித்தல் பற்றி தெளிவாக விளக்கினார். இப்பயிற்சியில் சி.வீரச்செல்வன் (அக்ராணி இன்டன்), விவசாயிகளுக்கு தேவையான விளை பொருட்களை பற்றியும், அக்ரி கார்ட் மற்றும் அக்ரி போர்ட்டெல் அதன் முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக விவசாயிகளுக்கு கூறினார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரம், கோபாலாபுரம் கிராமத்தை சேர்ந்த 45-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# எல் நினோ 2026 - தற்போதைய நிலைமையும் தமிழகத்தில் தாக்கமும் - ஓர் பார்வை

**எல் நினோ என்றால் என்ன?**

எல் நினோ என்பது பசிபிக் பெருங்கடலில் நடுப்பகுதி மற்றும் கிழக்குப் பகுதியில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை சாதாரண அளவை விட அதிகமாக உயரும் ஒரு இயற்கை காலநிலை நிகழ்வு ஆகும். இது உலகம் முழுவதும் பருவமழை, வறட்சி, வெள்ளம் போன்றவற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

**2026 இல் என்ன நடக்கிறது?**

தற்போதைய நிலை - மிகவும் தீவிரமானது. எல் நினோ நிலைமைகள் தற்போது உறுதியாக நிலவுகின்றன. மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்ப நிலை சராசரியை விட அதிகமாக உள்ளது.

இந்த எல் நினோ 2026-27 வடக்கு அரைக்கோளக் குளிர் காலம் வரை வலுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Niño 3.4 பகுதியில் கடல் வெப்பநிலை ஏற்றம் ஜூன் 17, 2026 அன்று +1.7°C-ஐ எட்டியுள்ளது. 24 காலநிலை மாதிரிகளும் ஒருமிக்க எல் நினோ வலுப்பெறும் என்று கணிக்கின்றன. ஜூலை - செப்டம்பரில் +2.0°C-ஐ கடந்து போகலாம் என்று மிகவும் வலுவான எல் நினோ ஆக மாறும் அபாயம் உள்ளது.

**'சூப்பர் எல் நினோ' வருகிறதா?**

உலக வானிலை அமைப்பு (WMO) இந்த எல் நினோ குறைந்தது மிதமான அளவிலாவது இருக்கும், சாத்தியமாக மிகவும் வலுவாக இருக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. நவம்பர் வரையிலும் தொடரும் வாய்ப்பு 90%க்கும் அதிகமாக உள்ளது.

ஜூன் 2026 காலநிலை கணிப்புகளின்படி, இந்த ஆண்டு எல் நினோ நிகழும் என்பது கிட்டத்தட்ட உறுதி. மேலும் இது மிகவும் வலுவான, வரலாறு காணாத அளவிலான நிகழ்வாக மாறும் வாய்ப்பு உள்ளது என்று ஐரோப்பிய ஆய்வு மையம் (JRC) தெரிவித்துள்ளது.

## இந்தியாவிலும் தமிழகத்திலும் என்ன தாக்கம்?

### தென்மேற்கு பருவமழை – குறைவு

2026 பருவமழை கேரளாவை ஜூன் 4 அன்று அடைந்தது. சாதாரண தேதியை விட 3 நாட்கள் தாமதமாக. இந்திய வானிலை ஆய்வுத்துறை (IMD) நீண்டகால சராசரியில் 90% மட்டுமே மழை கிடைக்கும் என்று கணித்துள்ளது. குறைபாடான பருவமழைக்கு 60% வாய்ப்பு இருப்பதாக எச்சரிக்கை உள்ளது.

2026 பருவமழை சீசனில் சுமார் 800 மி.மீ. மட்டுமே மழை கிடைக்கலாம் என ஞானிம் கணிக்கிறது. இது சாதாரண 870 மி.மீ. ஐ விட குறைவு. இதனால் நாட்டில் சுமார் 60% விவசாயிகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

### தமிழகத்திற்கு – வடகிழக்கு மழையில் அதிகரிப்பு!

வலுவான எல் நினோ தென்மேற்கு பருவமழையை பலவீனப் படுத்தும். ஆனால் வடகிழக்கு பருவமழை காலத்தில் (அக்டோபர் – டிசம்பர்) மழை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இது முக்கிய மாக தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா மாநிலங் களை பாதிக்கும்.

### உலக அளவிலான தாக்கங்கள்

செப்டம்பர் முதல் வெப்பமண்டல மற்றும் உபவெப்பமண்டல பகுதிகளில் கடும் வெப்பம் அதிகரிக்கும். டிசம்பர் 2026 முதல் பிப்ரவரி 2027 வரை இது உச்சத்தை எட்டும்.

### வறட்சி அபாயம்

ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் அதிகமாக இருக்கும். 2026 ஆண்டு வரலாற்றில் மிக வெப்பமான ஆண்டுகளில் ஒன்றாக இருக்கும் என்று கணிக்கப்படுகிறது. காடுகளில் தீ பரவும் அபாயம் தென் அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் அதிகரிக்கும்.

### சுருக்கம் தமிழகத்திற்கு முக்கிய கருத்துகள்

| விசயம் | நிலைமை |
|---|---|
| தென்மேற்கு பருவமழை | குறைவான மழை–வறட்சி அபாயம் |
| வடகிழக்கு பருவமழை | அதிகமான மழை வாய்ப்பு |
| வெப்பநிலை | சாதாரணத்தை விட அதிகமாக இருக்கும் |

| | |
|---|---|
| விவசாயம் அபாயம் | கோடை பயிர்களுக்கு நீர் பற்றாக்குறை |
| குடிநீர் | நீர்த்தேக்கங்களில் கவலைப்படத்தக்க குறைவு |




கட்டுரையாளர் : ***ப.நந்தகுமார், முதுநிலை உதவிப் பேராசிரியர், (மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல்), மின்னஞ்சல் : arnandhu218@gmail.com, தே.விக்னேஷ், உதவிப் பேராசிரியர் (மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல்), மின்னஞ்சல் : harishvignesh143@gmail.com, பயிர் மேலாண்மைத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி.***



# ஆகாயத்தாமரையை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்? மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றலாமா?



ஆகாயத்தாமரை என்ற வெங்காய தாமரை (WATER HYACINTHS) தென் அமெரிக்காவின் பிரேசில் நாட்டைத் தாயகமாக கொண்டது. இந்த தாவரம் 19ஆம் நூற்றாண்டில் அழகான பூக்களுக்காகவும் இலைகளின் வடிவத்திற் காகவும் உலகம் முழுவதுமாக கொண்டு செல்லப்பட்டு நீக்க மற அமோசான் முதல் சென்னை அடையாறு கால்வாய் வரை பரவி வருகின்றன. இன்று ஏரிகள், குளங்கள், கால்வாய்களில் ஆக்கிரமித்து ஒட்டு மொத்த நீர் நிலைகளுக்கு முட்டுக் கட்டையாக நிற்கிறது.

சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) உலகின் மோசமான 10 களை செடிகளில் ஒன்றாகவும் அதுமட்டுமல்ல 100 ஆக்கிரமிப்பு இனங்களில் ஒன்றாகவும் ஆகாயத் தாமரையை அடையாளப் படுத்தப்படுகிறது.

**அபரிமிதமான வளர்ச்சி எப்படி?**

ஆகாயத்தாமரையை நீர் நிலைகளில் அகற்றுவது அவ்வளவு எளிதல்ல. (தரையில் கிடைக்கும் பாதரசத்தை கையால் பிடிப்பது போல).

இதனுடைய அசுர வளர்ச்சிக்கு தரைவழி இனப்பெருக்கம் தான் (VEGETATIVE PROPAGATION) முக்கிய காரணமாகும்.

இதனுடைய தண்டுகளில் வரும் கொடிகள் (STOLONS) மிக வேகமாக புதிய கொடிகளை உருவாக்கி சங்கிலித் தொடராக பரவுகின்றன.

எடுத்துக்காட்டாக ஆகாயத்தாமரை செடி 120 நாட்களில் 1200 செடிகளாக பெருகி நீர்நிலைகளை முழுவதுமாக மூடி விடும். சுற்றுச்சூழல் சீர்கேடும் அதிக விளைச்சலுக்கு பயன் படுத்தப்பட்ட இரசாயன உரங்களும் மழைநீரால் அடித்து செல்லுவதால் அவை ஏரி குளங்களில் தேங்கியுள்ளது. அவற்றுடன் தொழிற்சாலை கழிவுகள் கூட கலப்பதால் இந்த செடிகள் பாசி உட்பட அசுர வேகத்தில் வளர்கின்றன.

**இதனால் என்னென்ன பாதிப்புகள் உண்டாகும்?**

1) நீரின் ஓட்டத்தை முடக்கி விடும்.

2) நீரில் ஆக்ஸிஜன் அளவு குறைந்து நீர் வாழ் உயிரி னங்கள் மூச்சு திணறி மடியும்.

3) பாசனக்கால்வாய் அடைத்து விடுவதால் நீர்ப்பாசனம் செய்வது கடினம்.

4) தேங்கியுள்ள நீரால் கொசுகள் பெருக்கம் அதிகமாக டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பரவும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்?**

மூன்று முறைகளில் கட்டுப்படுத்த முடியும். அவையாவன

1) இயற்பியல் முறை – கைகளால் எடுத்தோ, இயந்திரங்கள் மூலமாக அகற்றப்படுகின்றன. இதனால் அதிக மனித உழைப்பும் பொருட் செலவும் அதிகமாகும்.

2) இரசாயன முறை – இம்முறையில் களைக்கொல்லிகளை (கிளைபோசேட்) பயன்படுத்தி அழித்தல்.

3) ஆகாயத்தாமரை உண்டு வாழும் வண்டுகள், பூச்சிகளை நீர்நிலைகளில் விடுதல் – இது உயிரியல் முறையாகும்.

இந்த 3 முறைகளிலும் எந்த ஒரு தனிப்பட்ட முறைகளில் நிரந்தர தீர்வுவை தருவதில்லை. செடிகளை அகற்றிடவும் அவைகள் உறிஞ்சும் கழிவுநீரை கலக்காமல் தடுப்பதே அறிவியல் பூர்வமான தீர்வாகும்.

**ஆகாயத்தாமரையை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றலாமா?**

1) கண்டிப்பாக மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றலாம். அதனுடைய தண்டுகளில் அழகிய கைவினை பொருட்கள் தயாரிக்கலாம்.

2) இதனுடைய இலை, தழைகளை மக்க வைத்து ஊட்டமேற்றிய உரமாக மாற்றிடலாம்.

3) இதிலிருந்து உயிரி எரிபொருள் (BIO FUEL) தயாரிக்கலாம்.

பயனுள்ள பொருளாக மாற்றினால், இது சாபம் அல்ல, வரமே. வருமான தரக்கூடியதாக மாற்றலாம். நீர் மேலாண்மையில் திருப்பு முனையாக மாற்றலாம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# இப்கோ மரக்கன்று நடும் விழா

நாகப்பட்டினம், ஜுன் 29

கூட்டுறவு அமைச்சகத்தின் 5-வது நிறுவன தின விழாவை முன்னிட்டு, நாகப்பட்டினம் மாவட்டம், கோலப்பாடு கிராமத்தில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் IFFCO நிறுவனத்தின் சார்பில் மரக்கன்று நடும் விழா இப்கோ கள அதிகாரி பரஞ்சோதி, தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மொத்தம் 200 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் கூட்டுறவு உறுதி மொழி ஏற்றனர்.

தொடர்ந்து, மரம் வளர்ப்பதன் அவசியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கையைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரின் பங்கு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும் நானோ உரங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

# கற்பகம் பல்கலைக்கழகம், ஆர் ஜி எம் கல்வி குழுமம் மற்றும் தமிழிசைச் சங்கம் சார்பாக நடைபெற்ற இன்ஜினியரிங் கவுன்சிலிங் 2026 நிகழ்ச்சி




கோயம்புத்தூர், ஜுன் 29

கற்பகம் பல்கலைக்கழகம், ஆர் ஜி எம் கல்வி குழுமம் மற்றும் தமிழிசைச் சங்கம் சார்பாக நடைபெற்ற இன்ஜினியரிங் கவுன்சிலிங் 2026 நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஆர் கே ஆர் கல்வி குழுமங்கள் தலைவர் ராமசாமி கலந்து கொண்டு மாணவர்களுக்கு கவுன்சிலிங் சம்பந்தமான வழிகாட்டுதலை வழங்கினார்.

தொடர்ந்து கல்வியாளர் அஸ்வின் நடைபெற இருக்கக்கூடிய இன்ஜினியரிங் கவுன்சிலிங்- 2026, மாணவர்களுக்கு எண்ண கட் ஆப் மதிப்பு எடுத்தால் எந்த கல்லூரியில் எந்த பிரிவு தேர்ந்தெடுக்க வேண்டும் என்கின்ற வழிகாட்டுதலை விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடன் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். தொடர்ந்து உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் இருந்து 12ம் வகுப்பு தேர்வில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற 120 மாணவ மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் வெற்றியை தொடர்ந்து வரக்கூடிய மாதங்களில் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளும் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழிசைச் சங்கம் முன்னெடுத்த இந்நிகழ்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆர்ஜிஎம் கல்வி குழுமத்திற்கும் கற்பகம் பல்கலைக் கழகத்திற்கும் மற்றும் நிகழ்ச்சியின் வெற்றிக்காக உழைத்த அனைத்து சங்க நிர்வாகிகளுக்கும் இந்நேரத்தில் எங்களுடைய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயிகள் பொட்டாஸ் பாக்டீரியா பயன்படுத்த வேளாண்மை துறை அறிவுரை



அரியலூர், ஜூன் 29

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருங்கக்கனி அறிவுத்தலின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், அரியலூர் வட்டாரத்தில் உள்ள விவசாயக் கிடங்கை ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது, விவசாயிகள் கண்டிப்பாக ஒருங்கிணைந்த உரம் மேலாண்மையுடன் சமச்சீர் விகிதத்தில் உரங்களை பயன்படுத்த வேண்டும். பண்ணையில் கிடைக்கக் கூடிய அனைத்து வகையான தொழு உரம், மண்புழு உரம் இவற்றை பயன்படுத்த வேண்டும் மற்றும் அனைத்து வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும். அனைத்து பயிர்களுக்கும் தனித்தனியே உள்ள நுண்ணூட்ட உரங்கள், உயிரியல் காரணியான டி விரிடி, சூடோஸ்மோனாஸ் பயன்படுத்துதல், பயிர் சுழற்சி முறை மற்றும் பசுந்தால் பயிர்கள் சாகுபடி செய்து மடக்கி உழவு செய்தல் வேண்டும் என்றார்.

விவசாயிகளிடையே பொட்டாஷ் உரம் தற்போது 50 கிலோ கொண்ட மூட்டை ஒன்றின் விலை 2200 ஆகும். எனவே விவசாயிகள் பொட்டாஸ் பாக்டீரியா திரவ உரத்தை பயன்படுத்து வதால், பொட்டாஷ் உரம் அதிக அளவு குறைக்கலாம். பொட்டாஷ் பாக்டீரியா திரவ உயிர் உரம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

பொட்டாஷ் பாக்டீரியா உயிர் திரவ உரம் என்பது மண்ணில் கரையாத நிலையில் உள்ள பொட்டாஸ் சத்துகளை கரைத்து பயிர்கள் எளிதில் உறுஞ்சும் வகையில் மாற்றுகிறது. ரசாயன பொட்டாஷ் உரங்களின் பயன்பாட்டை 20 முதல் 40 சதவீதம் வரை குறைத்து, மகசூலை அதிகரிக்க செய்யும் சுழலுக்கு உகந்த இயற்கை உயிர் உரமாகும்.

பொட்டாஷ் பாக்ரியாவை பயன்படுத்துவதால் பயிர்களின் வேர் அமைப்பை வலுப்படுத்தி ஊட்டச்சத்து மற்றும் நீர் உறிஞ்சும் திறனை மேம்படுத்துகிறது. பூச்சி மற்றும் நோய் தொற்றுக்கு எதிராக போராடும் ஆற்றல்களை செடிகளுக்கு வழங்குகிறது. பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்களின் வடிவம், அளவு, நிறம், சுவை மேம்படுத்த வைக்கிறது.

ரசாயன உரங்களை தேவையை வெகுவாக குறைத்து விவசாய உற்பத்தி செலவை கட்டுப்படுத்துகிறது. இதை விதை நேர்த்தியாக 100 மில்லி திரவ உயிர் உரத்தை ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளை ஆரிய கஞ்சிகளை பயன்படுத்தி, விதை நேர்த்தி செய்து, உலர வைத்து பின்னர் விதைக்கலாம். நாற்று நடும்போது 100 மில்லி திரவ உயிர் உரத்தை 16 லிட்டர் நீரில் கலந்து நாற்றுகளின் வேர்கள் நனையுமாறு 30 நிமிடங்கள் வைத்து பின்னர் நடவு செய்யலாம்.

நேரடி வயலில் ஒரு ஏக்கருக்கு 200 மில்லி திரவ உரம் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைப்புக்கு முன்னர் பயன்படுத்தலாம். நீர் வழியாக ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி திரவ உரத்தை விதைத்த 15, 30 மற்றும் 45வது நாட்களில் பயன்படுத்தலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# கிசான் கோஸ்திஸ் என்கிற உழவர் திரள் பரவலாக்கம்

சேலம், ஜுன் 29

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டிணம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் நூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்ற கிசான் கோஸ்தீஸ் எனப்படும் உழவர் திரள் பரவலாக்கம் சுக்கம் பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி விவசாயிகள் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்கள் குறித்து எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன் தலைமை தாங்கி மண் பரிசோதனை, மண்வள அட்டை, உரங்களின் சமச்சீரான

பயன்பாடு மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள், பசுந்தாள் உரம் இடுதல் மற்றும் விவசாயிகளின் அடையாள எண் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார்.




தோட்டக்கலை உதவி இயக்குனர் கோதைநாயகி தென்னையில் காணப்படும் காண்டாமிருக வண்டு, சிவப்பு கூண் வண்டு, கருந்தலைப்புழு, வெள்ளை ரூகோஸ் கட்டுப்பாடு குறித்தும், சொட்டுநீர் பாசனம் குறித்தும் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இளநிலை பட்டு ஆய்வாளர் சுமதி மல்பெரி சாகுபடி, வெண்பட்டு புழு வளர்ப்பு முன்னேற்றத்திற்கான மானிய விவரங்கள் குறித்தும், எஸ்.பி.எஸ் மரபு வழி பண்ணை ஆசிரியர் சஞ்சய் பெருமாள், பாரம்பரிய நெல் மற்றும் இயற்கை பண்ணையம் குறித்தும் விளக்கம் அளித்தார். இப்பயிற்சியில் வன அலுவலர் தேசிங்கு ராஜன், கால்நடை உதவி மருத்துவர் அருணா ராணி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் வரதராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

தங்கத்தாரகை உழவர் உற்பத்தியாளர் நிறுவன கருத்துக் காட்சிகள், ட்ரிப் இந்தியா நுண்ணுயிர் பாசன கருவிகள் மற்றும் சிவசக்தி அக்ரோ சர்வீஸ் இயந்திரங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

வேளாண் இடுப்பொருட்களான விதைகள், நுண்ணூட்டங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், உயிர் உரங்கள், தோட்ட காய்கறிகள் ஆகியவை விவசாயிகளின் பார்வைக்கு கருத்து காட்சிக்கு அமைக்கப்பட்டிருந்தது. முடிவில் விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா திட்ட அலுவலர் களான செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்து இருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மானிய விலையில் தக்கைப்பூண்டு [Daincha] விதைகள் விநியோகம்

ஈரோடு, ஜூன் 29

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் தக்கைப்பூண்டு (Daincha) விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஈரோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சசிகலா தெரிவித்துள்ளார்.




தக்கைப் பூண்டு ஒரு சிறந்த பசுந்தாள் உரப்பயிராகும். இப்பயிரை சாகுபடி செய்து பூக்கும் நிலையில் மடக்கி உழவு செய்வதன் மூலம் மண்ணில் இயற்கையான கரிமச்சத்து மற்றும் தழைச்சத்து அதிகரிக்கிறது. இதனால் மண்ணின் வளம் மேம்பட்டு பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் கனிசமாக அதிகரிக்க உதவுகிறது.

மேலும் தக்கைப்பூண்டு பயிர் வளிமண்டல நைட்ரஜனை நிலைப்படுத்தி மண்ணில் சேர்க்கும் தன்மை கொண்டதால், இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்க முடிகிறது. இதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திச் செலவு குறைவதோடு, நிலத்தின் நீண்டகால வளமும் பாதுகாக்கப்படுகிறது.

**தக்கைப்பூண்டு (Daincha) பயிரிடுவதால் கிடைக்கும் முக்கிய நன்மைகள்**

● மண்ணின் கரிமச்சத்து மற்றும் நுண்ணுயிர் செயல் பாடுகளை அதிகரிக்கிறது.

● மண்ணின் நீர்பிடிப்பு திறனை மேம்படுத்துகிறது.

● இரசாயன உரங்களின் தேவையை குறைக்கிறது.

● களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

● மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்தி வேர் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குகிறது.

● அடுத்தடுத்த பயிர்களில் அதிக மகசூல் பெற வழிவகுக்கிறது.

● சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை வேளாண்மை நடை முறைகளை ஊக்குவிக்கிறது.

● நிலத்தின் நீண்டகால உற்பத்தித் திறனை பாதுகாக்கிறது.

எனவே ஈரோடு வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆதார் அட்டை, சிட்டா உள்ளிட்ட உரிய ஆவணங்களுடன் ஈரோடு வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் சித்தோடு துணை வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி மானிய விலையில் தக்கைப்பூண்டு (Daincha) விதைகளை பெற்று பயன் பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் சசிகலா கேட்டுக் கொண்டுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இயற்கை வேளாண்மையில் வெற்றி கண்ட விவசாயி சத்தியராஜின் வெற்றிக் கதை



திருச்சி மாவட்டம், புள்ளாப்பாடி, வாணதிரையன் பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் சத்தியராஜ். பொறியியல் படித்த இவர், ஆரம்ப காலத்தில் வெளிநாட்டில் பணிபுரிந்து நல்ல வருமானம் ஈட்டி வந்தார்.

இருப்பினும், வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு முக்கிய நிகழ்வு அவரை இயற்கை வேளாண்மையின் பாதைக்கு அழைத்துச் சென்றது. 2016ஆம் ஆண்டு அவரது தாயார் காலமானார். அந்தச் சம்பவம் அவரை மிகவும் பாதித்தது. இதன் காரணமாக வெளிநாட்டு வேலையை விட்டு சொந்த ஊருக்கு திரும்பினார். சொந்த ஊருக்கு வந்த அவர், இயற்கை வேளாண்மையின் தந்தை எனப் போற்றப்படும் நம்மாழ்வாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

பின்னர் பல இடங்களுக்கு பயணம் செய்து இயற்கை வேளாண்மையின் நுணுக்கங்களை கற்றுக்கொண்டார். ஆரம்பத்தில் அவரிடம் ஒரு ஏக்கர் நிலம் இருந்தது, ஆதலால் 2017 அவருடைய நிலத்தில் இயற்கை முறையில் சாகுபடி செய்யத் தொடங்கினார். மண்ணின் வளத்தை அதிகரிக்க பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மீன் அமிலம், மண்புழு உரம் (ஙளஷெதுஷ்உலிதுஸ்ரீலிவிமி), தொழு உரம் (ய்க்ஷூனி) போன்ற இயற்கை இடுபொருட்களை 2 முதல் 3 ஆண்டுகள் தொடர்ந்து பயன்படுத்தினார். இதன் விளைவாக மண்ணின் உயிர்ச்சத்து மற்றும் வளம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்தது. தற்போது அவரது நிலத்திற்கு கூடுதல் உரங்கள் தேவையில்லாத அளவிற்கு மண் வளம் மேம்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்தை மட்டுமே பயன்படுத்தி வெற்றிகரமாக சாகுபடி செய்து வருகிறார்.

சத்தியராஜ், பாரம்பரிய நெல் ரகங்களை சாகுபடி செய்யத் தொடங்கினார். தரமான அரிசி மற்றும் அதன் சிறந்த சுவை காரணமாக நல்ல வரவேற்பைப் பெற்றார். இதன் மூலம் கணிசமான வருமானத்தையும் ஈட்டத் தொடங்கினார். தற்போது அவர் சுமார் 30க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து சாகுபடி செய்து வருகிறார் மற்றும் மூவேந்தர் பாரம்பரிய விதை நெல் மையத்தை நிறுவியுள்ளார்.

**அந்நிறுவனம் உள்ளடக்கிய பாரம்பரிய நெல் வகைகள் :** அன்னமழகி, ஆத்தூர் கிச்சிலி சம்பா, இலுப்பை பூசம்பா, இரத்தசாலி, தங்க சம்பா, தூயமல்லி மற்றும் பல. அரிசி விற்பனையுடன் மட்டுமல்லாமல், மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்களையும் தயாரித்து சந்தைப்படுத்தி வருகிறார். அவை : கஞ்சிப்பொடி, இனிப்பு பொரி, நுலடை, கடலை மிட்டாய், புட்டு, இடியாப்பம், அவுல், காரப் பொரி, மிக்சர் அரிசி அரவை தொழில்நுட்பம் மற்றும் அவல், பொரி போன்ற தயாரிப்பு இயந்திரத்தையும் பயன்படுத்துகிறார். ஒரு ஏக்கரில் தொடங்கிய அவரது வேளாண்மை தற்போது 6 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவடைந்துள்ளது.



இயற்கை வேளாண்மைக்கு துணையாக பாரம்பரிய சிவகங்கை இனப்பசு ஒன்றையும் வளர்த்து வருகிறார். அதன் மூலம் கிடைக்கும் சாணம் மற்றும் கோமியத்தை இயற்கை வேளாண்மையில் பயன் படுத்தி வருகிறார். மேலும், பாரம்பரிய நெல் விதைகளை பிற விவசாயிகளுக்கும் வழங்கி இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து வருகிறார். வெளிநாட்டு வேலையில் இருந்து இயற்கை வேளாண்மைக்கு மாறி, ஒரு ஏக்கர் நிலத்தில் தொடங்கி இன்று ஆறு ஏக்கர் பரப்பில் வெற்றி கரமான இயற்கை விவசாயியாக வளர்ந்துள்ள சத்தியராஜ் பல இளைஞர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார். அவரது விடாமுயற்சி, இயற்கையின் மீது கொண்ட நம்பிக்கை மற்றும் சமூக அக்கறை ஆகியவை அவருடைய வெற்றியின் முக்கிய காரணிகளாகும்.

தகவல் : ***ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, நான்காம் ஆண்டு, வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில் வீட்டுக்குள் தென்னை மரம் வளர்ப்பது எப்படி?

சிலர் வீடு கட்டும் போது தென்னை மரங்கள் வீட்டுக்குள் வருமானால் முடிந்தவரை வீட்டுக்குள்ளேயே ஒதுக்கி வீடுகளில் கூட ஒரு குறிப்பிட்ட சதுர அளவை விட்டு அமைத்து இருப்பதை கேரளா மாநிலத்தில் அதிகமாகப் பார்க்கலாம். மற்றும் குமரி மாவட்டத்திலும் வீட்டுக்குள் தென்னை நிற்பதைப் பார்க்க முடிகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திலும் மற்றுமுள்ள சில இடங்களிலும் மாட்டுக் கெட்டகை, சாய்வுக் கொட்டகை மதில் சுவர்களின் மத்தியில் தென்னையை வீட்டு அமைத்திருக்கிறார்கள். இதனால் பாதிப்பு ஏற்படுமா என்பதை சற்று பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தென்னை மரம் நட்டத்திலிருந்து ஆயுள் முழுவதும் ஒரே மாதிரியான பருமனுடன் ஒத்தை தடி மரமாக வளருகிறது. மா, பலா, வேம்பு, பூவரசு போன்ற மரங்கள் சிறிய கன்று முதல் அதன் வளர்ச்சி அதிகரித்து மரம் நாளுக்கு நாள் பருமனுடன் வளர்ந்து கொண்டே போகிறது. அதனால் அத்தகைய மரங்கள் வீட்டுக்கு அருகாமையில் இருந்தால் சுவர் கீறல் விழும்.

**சுவர் அருகில் தென்னை**

மா, பலா போன்ற மரங்களின் வேர்கள் ஊசி மூனை அளவில் வளரத் தொடங்கி, பருத்து பெரிதாக மாறிவிடுகிறது. வேர்கள் அஸ்திவாரத்திற்குள் சென்றால் நாளா வட்டத்தில் சுவர்கள் கீறல் கொடுத்து கட்டிடத்தின் ஆயுள் குறையக்கூடும்.

ஆனால் தென்னை மரம் அப்படியல்ல, ஒரே அளவில் பருமனுடன் கடைசி வரை இருக்கிறது. கட்டிடம் கட்டும்போது வேர்கள் நுழைய முடிந்தால் நுழையும், முடியாவிட்டால் வளைந்து ஓரமாக செல்லும்.

ஊள்ளே சென்ற வேர்கள் அதே பருமனில் கடைசி வரை இருப்பதால் சுவர்கள் பாதிப்பதில்லை. வேர்களும் பிள்ளைப் பருவத்திலிருந்தே கவனித்தால் ஒரு விரல் அளவிலே வருகிறது. அதற்கு மேல் அந்த வேர்கள் பருமன் அடைவதில்லை.

எப்படி ஆரம்பமோ அப்படியே கடைசி வரை அதன் அளவில் மாறுபடாமல் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த பழைய வேர்க்ள அழிந்து விடுகிறது. புது வேர்கள் தோன்றி அழிந்து மக்கிய வேர்களுக்குள்ளேயே செல்கிறது. வேர்கள் பருமன் அடையாத காரணத்தால் மதில் சுவர்களோ, அஸ்திவாரமோ கீறல் கொடுப்பதில்லை. தென்னை வீட்டுக்குப் பக்கத்தில் நிற்பதினால் அல்லது வீட்டுக்குள் நிற்பதினாலும் எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

தேங்காய் பறிப்பவர் தேங்காய்களை சாக்குப் பைகளில் இட்டு இறக்கிக் கொடுக்கிறார்கள். இன்னும் சிலர் ஒவ்வொன்றாக தேங்காய் எடுத்து எட்டி எறிவார்கள். வயதான மரங்களை வெட்டிவிட வேண்டும் என்று நினைப்பவர்கள் சிறு, சிறு துண்டு களாக வெட்டி கயிறு கட்டி இறக்கிவிடலாம்.

தென்னையின் வருமானத்தை உணர்ந்தவர்களும் ஜீவகாருண்ய நம்பிக்கை அதிகமாக உள்ளவர்களும் தென்னையை உயிர் மரங்களாக கருதி வெட்ட முன் வருவ தில்லை. இருந்தாலும் சுவர்கள் அருகில் பிள்ளை நடும் போது 5 x 6 அடி தள்ளி நடுவது சாலச் சிறந்தது.

**விருந்தோம்பும் தென்னை**

வீட்டுக்குப் பக்கத்தில் தென்னை மரம் இருந்தால் எதிர்பாராமல் வந்த விருந்தினரை உபசரிக்க கஷ்டம் இல்லை. இளநீர் கொடுத்து உபசரிக்கலாம்.

அது மட்டுமல்ல காப்பி, டீ கொடுக்க அடுப்ப பற்ற வைக்க தென்னையின் பன்னாடை ஓலை பாளை கூராஞ்சி மழைக் காலத்தில் கூட நெருப்பு வெகுவாகப் பிடிக்கும். அதனால் தென்னை மரங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பது இல்லத்தரசி களுக்கு உதவியாக இருக்கிறது.

இதனால் தான் மகாகவி பாரதியார் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாட்டில் 'பத்து பன்னிரண்டு தென்னை மரம் பக்கத்தில் வேணும்' என்றார் போலும்.

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலைப்பேட்டை.*

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396